# நிறுவனங்களின் மருத்துவத் தமிழ் வளர்ச்சி

30

**முனைவர் சி.தியாகராஜன்,**

**பேராசிரியர் & தலைவர்,**

**அறிவியல்தமிழ் மற்றும் தமிழ்வளர்ச்சித் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்**

**ஆய்வுச் சுருக்கம்**

'புத்தம் புதிய கலைகள், பஞ்ச பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும், மெத்த வளருது மேற்கே, அந்த மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை, சொல்லவும் கூடுவதில்லை, அவை சொல்லும் திறமை தமிழ்மொழிக்கில்லை' என்று பலரும் அறிவியலையும் மருத்துவம் பொறியியல் போன்ற பொறியியல் கல்விகளைத் தமிழ்மொழியில் கற்பிக்க முடியாது என்று இந்நாளிலும்கூடப் பிற்போக்கு எண்ணம் கொண்டிருக்கின்றனர். ஆனால் அவற்றையெல்லாம் தகர்த்து, 1850 களிலேயே மருத்துவத்தைத் தமிழில் கற்பித்த சான்றுகளும் கற்பித்த நூல்களும் கிடைக்கின்றன. இக்கட்டுரை, பல அமைப்புகளும் நிறுவனங்களும் மருத்துவத்தைத் தமிழ்மொழியில் கற்பிக்க நூல் வெளியிட்டுத் துணைபுரிந்தமையைப் பட்டியலிடுகின்றது.

**திறவுச்சொற்கள்**

ராயல் மருத்துவமனை, இரேனியஸ் பாதிரியார், தமிழில் ஐரோப்பிய எழுதுமுறை, 1832 'இங்கிலாந்து தொழிலாளர் வர்க்கத்தின் சுகாதார நிலை', கிறித்துவ இலக்கியச் சங்கம், தமிழ்நாடு அரசு பாடநூல் நிறுவனம், தமிழ்ப் பல்கலைக்கழகம் - மருத்துவத் தமிழ் வெளியீடுகள், சோவியத் யூனியனின் மருத்துவத் தமிழ்ப்பணி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (என்.சி.பி.எச்.), தமிழ் வளர்ச்சிக் கழகம் - மருத்துவக் களஞ்சியம்

**முன்னுரை**

அறிவியலின் வளர்ச்சியையும், மருத்துவத்தின் வளர்ச்சியையும் தனித்தனியே காணுதலாகாது. அதுபோன்றதே, அறிவியல் தமிழின் வளர்ச்சியும் மருத்துவத்தமிழின் வளர்ச்சியும் ஆம். விடுதலைக்கு முன்பிருந்தே அறிவியல்தமிழ் குறித்தும், மருத்துவத்தமிழ் குறித்தும் பல நூல்கள் எழுந்திருந்தன. அச்சுப்பொறிகளின் தமிழக வருகைக்குப் பின்னர்த் தமிழ் இலக்கண, இலக்கிய நூல்கள் பல அச்சாக்கம் கண்டன. அதேநேரத்தில் பொதுமக்களுக்கான அறிவியல் (பொதுஅறிவியல், சுகாதாரம், இயற்பியல், வேதியியல், நலவாழ்வு) நூல்கள் பலவும் எழுதப்பட்டன. இலக்கியத் தமிழும், மருத்துவத்தமிழும் ஒருசேர வளர்ந்தன. இக்கட்டுரை பல்வேறு அமைப்புகள்/நிறுவனங்கள் மருத்துவத்தமிழ் வளர்ச்சிக்காக வெளியிட்டுள்ள நூல்களை வரலாற்றின்வழி அணுகுகின்றது.

**மருத்துவ நூல்களின் பெருக்கம்: ஏன்?**

தாய்மொழிக் கல்வியும், அனைவருக்கும் கல்வி என்ற கல்விப் பரவலாக்கத்தின் கூறுகளானும் இன்று கல்வித்துறை சமூகத்தின் அனைத்துப் பிரிவினர்க்கும், விளிம்புநிலையினர்க்கும் எட்டும் கனியாகி உள்ளது. நவீனத்தின் உச்சத்தில் இன்று உலகம் உள்ளங்கை உருண்டையாகி விட்டது. அதிலும் குறிப்பாக அண்மையில் கடந்துசென்ற பத்தாண்டுகள், இணையம் இன்றி இன்னுயிர் இல்லை என்னுமளவிற்குக் கடத்திவிட்டது. கொரொனா என்னும் கோரணி நச்சில் மீண்டவேளையில், அந்நாளைய ஐரோப்பியர் வருகையின்போது மருத்துவத்துறையின் 'சுகாதாரம்' குறித்த கருத்தியலே முதன்மையாக ஓங்கியிருந்ததைக் காண்கிறோம்.

போர்த்துக்கீசியர்கள் இந்தியாவின் கோவாவிற்கு வந்தபின்னர் அங்கு 'ராயல்' என்னும் பெயர்கொண்ட மருத்துவமனையை ஏற்படுத்தினர். பின், இந்தியாவில் தாவரமும் மருந்தும்' என்னும் மதச்சார்பற்ற முதல்நூலை 1563இல் வெளியிட்டுள்ளனர். கிழக்கிந்தியக் கம்பெனியார் ஆட்சி விரிவாக்கத்திற்குப் பின்னர்த் தங்களுக்கும் தங்கள் சிப்பாய்களுக்கும் மருத்துவம் செய்திடச் சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் 1664இல் ஒரு மருத்துவமனையை நிறுவினர்.

1818 ஆமாண்டு இரேனியஸ் பாதிரியார் சமயப் பரப்புதலோடு, காலரா நோய் குறித்த துண்டறிக்கையையும் வெளியிட்டார். 1835 இற்குப் பின்பாக அச்சுக்கூடங்களின் மீதிருந்த தளர்வு, சுதேசிகளையும் அச்சுப் பணியில் ஈடுபட வைத்தது.

1818 அக்டோபர்த் திங்களில் சென்னையில் காலராநோய் தீவிரமாகப் பரவியது. கொடிய தாக்கத்தை ஏற்படுத்திய நிலையில் பலரும் உயிரிழந்தனர். ஆகையினால், இம்மக்களுக்குத் தேவைப்பட்ட முதலுதவிகளை வழங்கி துணிச்சலுடன் செயற்பட்டார், இரேனியஸ். அதனால் காலரா நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் காலராத் தடுப்புக் குறித்த துண்டறிக்கை எழுதி அச்சிட்டுப் பொதுமக்களுக்கு வழங்கினார்.

1820 இல் சென்னையிலிருந்துத் திருநெல்வேலிக்கு மாற்றங்கண்ட பாதிரியார், 1832 இல் நெல்லையில் காலரா நோய்தாக்கம் தீவிரம் பெற்றிட அங்கும் மக்களுக்கு வேண்டிய முதலுதவியும், விழிப்புணர்வும் செய்தார். சென்னையைப் போன்றே நெல்லையிலும் இந்நோய் குறித்த விழிப்புணர்வைத் துண்டறிக்கையாக வெளியிட்டார். இது, மருத்துவத்தமிழ் ஆய்வாளர்களால் 'தமிழில் ஐரோப்பிய எழுதுமுறையின் தொடக்கமாக' அறியப்படுகின்றது.

1832 ஆமாண்டு இங்கிலாந்தில், 'தொழிலாளர் வர்க்கத்தின் சுகாதார நிலை' என்ற நூலை எட்வின் சாட்விக் என்பார் எழுதினார். இவர் வழக்கறிஞர். ஆதலால், இங்கிலாந்தில் நிகழ்ந்த தொழிற்புரட்சி, அதனால் ஏற்பட்ட தொழிற்பேட்டை பெருக்கம், அதனைச் சுற்றி ஏற்பட்ட சுகாதாரமற்ற குடியிருப்புகள், ஊர் மற்றும் நகரங்களின் அயற்புறங்களில் தேங்கும் கழிவுகள் போன்றவை விரிவாக ஆராயப்பட்டன. இதன் விளைவாக இங்கிலாந்தில் பொது சுகாதாரச் சட்டம் அமைக்கப்பட்டது. 1848-1854 இடைப்பட்ட காலப்பகுதியில் இங்கிலாந்தில் காலரா நோய் தீவிரம் பெற்றது.

இதற்கு மாசடைந்த குடிநீரே காரமெனக் (ஜான் ஸ்னோ, வில்லியம் பட்) கண்டறியப்பட்டது. எனவே பொதுசுகாதாரம் மற்றும் துப்புரவு குறித்த விதிமுறைகள் நடைமுறையாகிட இதனை

அனைத்து நாடுகளும் பின்பற்றத் தொடங்கின. இதனை வழிமொழிந்து குறிப்பிட்ட ஒரு நோயை மட்டும் குறித்த நூல் தோன்றாமல் பொதுசுகாதாரம், துப்புரவு, நல்வாழ்வை மையப்படுத்தி நூல்கள் பல எழுந்தன. இது தமிழகத்திலும் நிகழ்ந்தது. இதன் பின்பாகப் பலரும் மருத்துவச் செய்திகளை வெளியிடுவதில் முனைந்தனர். பல்வகை அமைப்புகள், நூல்கள், இதழ்கள் ஆகியவற்றின்வழி மருத்துவத் தமிழ் சார்ந்த சிந்தனைகளை வெளியிட்டனர். அவற்றுள் நிறுவனங்களின் மருத்துவத் தமிழ் நூற்பணியை இக்கட்டுரை மையமிட்டு அமைகின்றது.

**மருத்துவ நூல்களை வெளியிட்ட நிறுவனங்கள்**

**கிறித்துவ இலக்கியச் சங்கம்**

1857 இல் இலண்டனில் தொடங்கப்பட்ட இச்சங்கத்தின் இந்தியப் பிரதிநிதியாக முன்னின்று நடத்தியவர், ஜான் முர்டாக். வட்டார/தாய்மொழிக் கல்வியின் வாயிலாக அனைவருக்கும், அனைத்தும் எட்டவேண்டும் என்ற கருத்தியலின்படி, வட்டார/உள்ளூர் மொழியில் சமய, பள்ளிப்பாட நூல்களை வெளியிடுவது இதன் முதன்மைப் பணியாகும்.

- 1927 கண் நோய் — கே.ஏ.ராஜா
- 1928 சுகவழி — சிவ ராமலிங்கம் பிள்ளை
- 1929 கண்வலி — எஸ்.கஸ்தூரிரங்கஅய்யங்கார்
- 1929 ஈ என்னும் கொலைகாரன் — கே.ஏ. ராஜா
- 1969 மருத்துவக் கலை அன்றும் இன்றும் — சா. ராஜதுரை
- 1972 துணை செவிலி மருத்துவப் பெண்கள் பாடபுத்தகம் — ஏ.எம்.சால்கி (சா. ராஜதுரை-மொழிபெயர்ப்பு)
- 1978 உடல் பருமன் — சுசிகரன் ரங்கசாமி
- 1980 என் கதை - காது — கல்வி கோபாலகிருஷ்ணன்
- 1981 ஆபத்துக்கு முதலுதவி — -
- 1988 மக்கள் மருத்துவம் — சந்திரா ஆசீர்வாதம். லீலாவதி லூத்தர்
- 1988 சுகாதாரப் பணியாளர் பாடப்புத்தகம் — எஸ். தேவராஜன் (மொழிபெயர்ப்பு)

இவ்வமைப்பு 250இற்கும் மேற்பட்ட பொருண்மைகளில் நூல்களை மொழிபெயர்த்தும், படைத்தும் உள்ளது.

**தமிழ்நாடு அரசு பாடநூல் நிறுவனம்**

1960 ஆமாண்டில் கொண்டுவரப்பட்ட தமிழகத்தில் வெளியிடப்படும் பாடநூல்களைத் தேசிய மயமாக்கும் திட்டத்தின் விளைவாகத் தமிழ்நாடு அரசு பாடநூல் நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது. 1962இல் ‘தமிழ் வெளியீட்டுக் கழகம்’ என்னும் பெயரில் அரசால் தொடங்கப்பட்ட நிறுவனமே 1970 இல் தமிழ்நாடு அரசு பாடநூல் நிறுவனமாகப் பெயர்மாற்றங்கண்டது. சற்றேறக்குறைய 700உக்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டிருப்பினும், தமிழ்நாட்டின் தலைசிறந்த மருத்துவர்கள் கொண்டு சில மருத்துவ நூல்களும் வழங்கியுள்ளது. 1978 இல் தன்னுடைய மருத்துவத்தமிழ் சார்ந்த வெளியீடுகளை நிறுத்திக் கொண்டது.

| | | |
|---|---|---|
| • 1964 | நீரிழிவு - க்ஷயரோகம் | மரு. அ. கதிரேசன் |
| • 1965 | என்புருக்கி நோய் | மரு. அ. கதிரேசன் |
| • 1966 | மகப்பேறும் மாதர் நோயும் | மரு. மணிமேகலை (மொ.பெ.) |
| • 1967 | புற்றுநோய் | மரு. அ. கதிரேசன் |
| • 1971-72 | உடலியங்கியல்<br>பகுதி 1 முதல் 4 வரை | மரு. ஜி.வெங்கடசாமி<br>மரு. டி. சரோஜினி<br>எஸ்.கே.துரைராஜ்<br>மரு. சேது (மொ.பெ.) |
| • 1976 | மார்பு நோய்கள் | மரு. அ. கதிரேசன் |
| • 1978 | மருத்துவத் தாதியருக்கு<br>உடற்கூற்றியலும், உடலியங்கியலும் | மரு. எஸ்.எம். மணிவண்ணன் |
| • 1978 | தோல் வியாதிகள் | மரு. எ.ஏஸ். தம்பையா |
| • 1978 | இரைப்பை, குடல், மலக்குடல் | மரு. என்.அரங்கபாஷ்யம்<br>மரு. து.ஞானப்பிரகாசம் |

**தமிழ்ப் பல்கலைக்கழகம் - மருத்துவத் தமிழ் வெளியீடுகள்**

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையில் 14 நூல்களும், மருத்துவத்துறையில் 14 நூல்களுமாக மொத்தம் 28 தலைப்புகளில் நூல்கள் எழுத 1982ஆம் ஆண்டு

சூன் திங்களில் ஆணைகள் வெளியிடப்பட்டன. இவை அனைத்தும் எம்.பி.பி.எஸ். பாடத்திட்டத்தின்கீழ் மாணவர்களுக்குப் பயன்படும் நோக்கத்துடன் எழுதப்பட்டவை.

| | |
|---|---|
| • காசநோய் | மரு. அ.கதிரேசன் |
| • பொது அறுவை மருத்துவம் (தமிழக அரசு பரிசுபெற்ற நூல்) | மரு சு. நரேந்திரன் |
| • அறுவைச் சிகிச்சை நோய்நாடல் (தமிழக அரசு பரிசுபெற்ற நூல்) | மரு. லெ. சிலராமன் |
| • மருந்தியல் | மரு. மு. துளசிமணி |
| • உடற்கூறு - கையும் நெஞ்சுப் பகுதியும் | மரு. எம். முத்து |
| • குழந்தை நல மருத்துவம் தொகுதி - 1, 2 | மரு. ஞா. இராஜராசேசுவரி<br>மரு. அ. செகதீசன் |
| • உடற்கூறு - வயிறும் கால் உறுப்புகளும் | மரு. ந. கிருட்டினமூர்த்தி |

மேற்கண்ட பாடத்திட்ட நூல்களைத் தவிர மருத்துவத் தமிழ் குறித்தும் நூல்கள் பல தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வாயிலாக வெளியிடப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1 | 1986 | குடற்புண்ணைக் குணப்படுத்தலாம் | மரு. சு.நரேந்திரன் |
| 2 | 1986 | பொது அறுவை மருத்துவம் | மரு. சு.நரேந்திரன் |
| 3 | 1986 | மனிதனும் மரபியலும் | மரு. இராசராசேஸ்வரி |
| 4 | 1986 | அறுவைச் சிகிச்சை நோய் நாடல் | மரு. லெ.சிவராமன் |
| 5 | 1987 | சித்த மருத்துவ நூலோதி | சே. பிரேமா |
| 6 | 1987 | உடல் நலம் | இராம. சுந்தரம் |
| 7 | 1989 | நீரிழிவும் மருத்துவமும் | ஐ. சாதிக் |
| 8 | 1989 | சித்த மருத்துவத் தொகையகராதி | சே. பிரேமா |
| 9 | 1993 | உடற்கூறு | மரு. எம். முத்து |

| | | | |
|---|---|---|---|
| 1 | 1994 | நோயும் மருந்தும் | த.கோ. பரமசிவம் |
| 1 | 1994 | கொழுப்புயர்வும் உணவுவகைக் கட்டுப்பாடுகளும் | வா. ஹசீனா பேகம் |
| 1 | 1994 | அகத்தியர் வைத்திய காவியம் - 1500 | வே.ரா. மாதவன் |
| 1 | 2001 | பொதுமக்களுக்கான மருத்துவ நூல்கள் - ஓர் ஆய்வு | நே.ஜோசப் |
| 1 | 2001 | நாட்டுப்புற மருத்துவம் | க.சாந்தி |
| 1 | 2002 | மருத்துவக் கலைச்சொற்கள் (8000 கலைச்சொற்கள்) | நே.ஜோசப் |
| | 2002 | வைத்திய சிந்தாமணி | வே.ரா. மாதவன் |
| | 2002 | தன்வந்திரி வைத்திய கும்மி - 300 | வே.ரா. மாதவன் |
| | 2005 | பாலூட்டிகள் | இராம. சுந்தரம் |
| | 2005 | எளிய வைத்திய முறைகள் - 800 | சே. பிரேமா |
| 2 | 2007 | வீட்டு மருத்துவம் | சே. பிரேமா |
| 2 | 2009 | கண் நோய்களும் நவீன மருத்துவமும் | த. கோ. சாந்திநாதன் |
| 2 | 2009 | அகத்தியர் வைத்தியம் - 300 | வே.ரா. மாதவன் |
| 2 | 2009 | அகத்தியர் வைத்தியம் - 108 | வே.ரா. மாதவன் |
| 2 | 2009 | அகத்தியர் குணவாகடம் | வே.ரா. மாதவன் |
| 2 | 2009 | அகத்தியர் வைத்தியம் - 205 | வே.ரா. மாதவன் |
| 2 | 2009 | அகத்தியர் சரக்கு சுத்தி | வே.ரா. மாதவன் |
| 2 | 2014 | செரிமானப் பாதை அறுவை மருத்துவம் | மரு. சு.நரேந்திரன் |
| 2 | 2017 | எலும்பை அறிந்தால் | மரு. ச.குமரவேல் |

2 2021 அகத்தியர் வைத்திய இரத்தினச் சுருக்கம் வே.ரா. மாதவன்

**சோவியத் யூனியனின் மருத்துவத் தமிழ்ப்பணி**

சோவியத் நாட்டின் பிரிவிற்கு முன்பாக மாஸ்கோ நகரிலிருந்த ‘மீர்’ மற்றும் ‘முன்னேற்றப் பதிப்பகங்கள்’ பல மருத்துவ நூல்கள் வெளியிட்டன. இவற்றும் பெரும்பாலும் இரஷ்ய மொழியிலிருந்துத் தமிழ்மொழிக்குச் செய்யப்பட்ட மொழிபெயர்ப்பு நூல்களே ஆகும். மொழிபெயர்ப்பு நூலாகியபோதும் பொதுமக்களுக்குச் சென்றடைய வேண்டும் என்னும் கருத்தியலோடு குறைந்த விலையில் வெளியாகின.

- 1980 மனித உடல்கூறு இயலும், உடல் இயங்கு இயலும் மரு. அ.கதிரேசன்
- 1981 இதயத்தை வலுவாக்கு மரு. ஏ.எஸ். மூர்த்தி
- 1983 அனைவருக்குமான உடல் இயங்கு இயல் மரு. அ.கதிரேசன்
- 1985 காது, மூக்கு, தொண்டை மரு. அ.கதிரேசன்
- 1987 செவிலியர்களுக்கான கையேடு மரு. அ.கதிரேசன்
- 1987 நான் தந்தையைப் போல் இருக்கிறேன் மரு. பாக்கிய சுந்தரம்
- \- பேறுகால மருத்துவம் -
- \- பருவ மற்றும் கல்வி உளவியல் -

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (என்.சி.பி.எச்.)**

மும்பையில் இருந்த இந்தியப் பொதுவுடைமை இயக்கதின் தலைமைப் பிரிவின் முயற்சியால் ‘மக்கள் நூல் வெளியீட்டகம்’ தொடங்கப்பட்டது. பின்னர் 1942 இல் சென்னையிலும் தோற்றம் கண்டது. இம்மக்கள் நூல் வெளியீட்டகமே பின்னாளில் (1951-இற்குப் பிறகு) ‘நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்’ என்ற பெயர் மாற்றங்கொண்டு இந்நாள் வரை வழக்கிலிருந்து வருகின்றது.

சமுதாய மாற்றத்தை உள்ளடக்கிய முற்போக்குக் கருத்துகள் கொண்ட நூல்களோடு மருத்துவத் தமிழ்சார் நூல்களையும் வெளியிட்டுள்ளது.

1 1951 மனநோயும் இன்றைய மருத்துவமும் மரு. ஒ.சோமசுந்தரம், மரு டி.ஜெயராமகிருஷ்ணன்

1957 புற்றுநோய் மரு. எஸ்.என். ராமசாமி

| | | | |
|---|---|---|---|
| | 1958 | சுகப் பிரசவம் | மரு. எஸ்.என். ராமசாமி |
| | 1962 | உடலியல் மருத்துவ வரலாறு | மரு. என். வானமாமலை.<br>மரு. எஸ். தோத்தாத்ரி |
| | 1968 | க்ஷய நோயும் தடுப்பு முறைகளும் | டாக்டர் அ. கதிரேசன் |
| 6 | 1968 | உங்கள் குழந்தை | டாக்டர் அ. கதிரேசன் |
| 7 | 1970 | மாரடைப்பு நோய் தீர்வும் தடுப்பு முறைகளும் | டாக்டர் அ. கதிரேசன் |
| 8 | 1971 | குழந்தையும் வளர்ப்பு முறைகளும் | டாக்டர் தி. திருஞானம் |
| 9 | 1972 | மூளையை நம்பலாமா?<br>(மொழிபெயர்ப்பு) | மரு. அ. கதிரேசன் |
| 1 | 1975 | உங்கள் இருதயம் | மரு. அ. கதிரேசன் |
| 1 | 1976 | தொழில்வழி நோய்கள்<br>(தொகுப்பு நூல்) | மரு. ஜி. வெங்கடசாமி<br>மரு. லலிதா காமேஸ்வரன்<br>மரு. அ. கதிரேசன் |
| 1 | 1976 | வைட்டமின்கள் (தொகுப்பு நூல்) | மரு. ஜி. வெங்கடசாமி<br>மரு. லலிதா காமேஸ்வரன்<br>மரு. அ. கதிரேசன் |
| 1 | 1976 | வயிற்றுப் போக்கும் வயிற்றுக் கடுப்பும் | மரு. ஜி. வெங்கடசாமி<br>மரு. லலிதா காமேஸ்வரன்<br>மரு. அ. கதிரேசன் |
| 1 | 1976 | ஹார்மோன்கள் | மரு. ஜி. வெங்கடசாமி<br>மரு. லலிதா காமேஸ்வரன்<br>மரு. அ. கதிரேசன் |
| 1 | 1977 | இரத்த வாந்தியும் சனியில் இரத்தமும் | மரு. ஜி. வெங்கடசாமி<br>மரு. லலிதா காமேஸ்வரன்<br>மரு. அ. கதிரேசன் |
| 1 | 1977 | பூச்சிகளால் பரவும் நோய்களும் தடுப்பு முறைகளும் | மரு. ஜி. வெங்கடசாமி<br>மரு. லலிதா காமேஸ்வரன்<br>மரு. அ. கதிரேசன் |

| | | | |
|---|---|---|---|
| 1 | 1979 | குழந்தைப் பருவ நோய்களும் குழந்தைகள் பாதுகாப்பும் | மரு. பி. சந்திரா |
| 1 | 1979 | குழந்தை வளர்ப்பு | மரு. பி. சந்திரா |
| 1 | 1980 | தொற்றுநோய்களும் தடுப்பு முறைகளும் | கல்வி கோபாலகிருஷ்ணன் |
| 2 | 1982 | முதலுதவி | மரு. கலவை மு. முபாரக் அலி |
| 2 | 1982 | தொழில் சார்பு நுரையீரல் நோய்கள் | மரு. கே.என். ராஜன் |
| 2 | 1982 | சத்துணவுத் திட்டம் | கல்வி கோபாலகிருஷ்ணன் |
| 2 | 1983 | விஞ்ஞான நோக்கில் நோய் நீக்கும் மூலிகைகள் | மரு. சுப. சதாசிவம் |
| 2. | 1985 | நோயை வெல்வோம் | மரு. சு. நரேந்திரன் |

**தமிழ் வளர்ச்சிக் கழகம் - மருத்துவக் களஞ்சியம்**

அன்றைய கல்வி அமைச்சராக இருந்த தி.சு.அவினாசிலிங்கம் என்பாரின், 'அனைத்துத் துறைகளிலும் தமிழ் வளர்ச்சி' என்பதன் வெளிப்பாடே தமிழ் வளர்ச்சிக் கழகம். இதற்காக 1946 இல் 'தமிழ் வளர்ச்சிக் கழகத்தை' நிறுவி, ஆங்கில மொழியிலுள்ள Encyclopaedia வைப் போன்று தமிழிலும் கலைக்களஞ்சியங்கள் உருவாக்குவதே இக்கழகம் முதன்மைப் பணியாகும்.

இக்கழகத்தின் வாயிலாக அலோபதி என்னும் ஆங்கில மருத்துவம் தொடர்பான களஞ்சியப் பணிகள் நடைபெற்றன. 'மருத்துவக் களஞ்சியம்' எனப் பெயரிடப்பெற்று முதல் தொகுதி 1994 கிலும் 12 ஆவது தொகுதி 2003 இலும், இக்கலைக்களஞ்சியத்தின் கலைச்சொல் அடைவு - 2006 இலும் வெளிவந்து நிறைவுற்றன.

- 1994 தொகுதி 1 உடல் நலம்
- 1995 தொகுதி 2 தாய் சேய் நலம்
- 1996 தொகுதி 3 புலனுறுப்புக்கள்- 1 (கண், செவி, மூக்கு, தொண்டை)
- 1996 தொகுதி 4 புலனுறுப்புக்கள்- 2 (தோல்,பல்)
- 1998 தொகுதி 5 மூளை, மனநலம், நாளமில் சுரப்பிகள்
- 1999 தொகுதி 6 செரிமான மண்டலம், மூச்சு மண்டலம்

| | | |
|---|---|---|
| • 1999 | தொகுதி 7 | தொற்று நோய்களும், பால்வினை நோய்களும் |
| • 1999 | தொகுதி 8 | புற்று நோயும் முதியோர் நலமும் |
| • 2001 | தொகுதி 9 | இதய இரத்த நாள மண்டலம் |
| • 2001 | தொகுதி 10 | சிறுநீரகம் மற்றும் இனவள உறுப்பு மண்டலம் |
| • 2001 | தொகுப்பு 11 | எலும்பியல், மாற்றுறுப்பியல், ஒட்டறுவை மருத்துவம் |
| • 2003 | தொகுதி 12 | மரபியல், நோய் எதிர்ப்பாற்றல் மண்டலத்தின் அடிப்படைகள், விபத்து மருத்துவம் |
| • 2006 | தொகுதி 13 | மருத்துவக்களஞ்சியம் கலைச்சொல் அடைவு |

**முடிவுரை**

அறிவியல் தமிழுக்கும் மருத்துவத் தமிழுக்கும் ஆர்வமே முதன்மையாகின்றன என்பதை அறியலாம். மருத்துவத் துறையின் பல்வகைப் பிரிவிலும் நூல்கள் பல எழுந்திருப்பது கொண்டு அத்துறை வளமும் வளர்ச்சியும் அடைந்திருப்பதை அறியலாம். மருத்துவத்தைத் தமிழ்மொழியின் வாயிலாகக் கற்பிக்கும் போது மொழி வளர்ச்சி அடைவதுடன் கற்றலும் உயிர்ப்போடு இருக்கும். தாய்மொழியினால் அமையும் சிந்தனைகள் உயர்ந்த குறிக்கோளை உலகத்திற்கு எடுத்தியம்பும் என்பது தெளிவு.

**துணைநூற்பட்டியல்**


- பல்கலைத்தமிழ் - அறிவியல் தமிழ், இராதா செல்லப்பன், (பதி.), பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி-24, 2008
- தமிழ் வளர்க்கும் அறிவியல், இராம.சுந்தரம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. இரண்டாம் பதிப்பு 2012